**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**---------**

# IN THE COURT OF FAST TRACK (MAGISTERIAL LEVEL) COURT, NAGERCOIL.

**Calender**
**Miscellaneous Case No. S.T.C.No. 135 of 2022**
**Preliminary Register**
**Sessions**

**Deposition of Witness for Complainant PW1**

| | |
|---|---|
| பெயர் | : திரு. ஸ்ரீராமகிருஷ்ணன் |
| தந்தை பெயர் | : திரு. கார்த்திகேயன் |
| கிராமம் | : |
| தாலுகா | : அகஸ்தீஸ்வரம் |
| தொழில் | : |
| வயது | : |

Solemnly Affirmed in accordance with the provisions of Act 44 of 1969 of the day of **08.08.2025**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் என்ன படித்திருக்கிறேன் என்றால் பி.இ. படித்திருக்கிறேன். எனக்கு சொந்த ஊர் என்ன என்றால் முகிலன்விளை. நான் பி.இ எப்போது முடித்தேன் என்றால் கடந்த 2008ம் ஆண்டு முடித்தேன். 2008 முதல் நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் பைனான்ஸ் தொழில் செய்து வருகிறேன். அதன் பெயர் ஸ்ரீராமகிருஷ்ணன் பைனான்ஸ் நடத்தி வருகிறேன். மேற்படி பைனான்ஸ் எந்த வருடம் ஆரம்பித்தது என்றால் 2008ம் ஆண்டு. படித்து முடித்த உடன் பைனான்ஸ் ஆரம்பித்துவிட்டேன். பைனான்ஸ் பதிவு செய்யப்பட்டதா என்றால் பதிவு செய்யப்பட்ட பைனான்ஸ் ஆகும். எவ்வளவு முதலீடு செய்து பைனான்ஸ் ஆரம்பித்தேன் என்றால் ரூபாய் 5 லட்சம் வைத்து ஆரம்பித்தேன். எனக்கு எப்போது திருமணம் நடைபெற்றது என்றால் 2008ம் ஆண்டு. பிரகஸ்பதி சிட்பண்ட் என் மாமா எவ்வளவு நாட்களாக வைத்திருக்கிறார் என்றால் 30 வருடங்களாக வைத்திருக்கிறார். நான் நடத்தி வரும் ஸ்ரீராமகிருஷ்ணா பைனான்ஸ் சம்பந்தப்பட்ட ஆவணங்களை இந்த வழக்கில் தாக்கல் செய்ய இயலுமா என்றால் இயலும். எதிரியின் வயது என்ன என்றால் 68 இருக்கும்.

எதிரிக்கும் எனக்கும் எவ்வாறு பழக்கம் என்றால் எதிரியின் மகன் என்னுடன் படித்தார். உத்தேசமாக எந்த ஆண்டில் இருந்து தெரியும் என்றால் 2000ம் ஆண்டில் இருந்து தெரியும். 2000 ஆண்டில் இருந்து பழக்கம் 2 ஆண்டுகளாக நல்ல பழக்கம். எதிரி என்ன தொழில் செய்தார் என்றால் கார் பழைய கார்களை வாங்கி விற்கும் பிஸ்னஸ் செய்து வருகிறார். எதிரி எவ்வளவு காலமாக கார் தொழில் செய்து வருகிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. கார் தொழிலின் பெயர் தெரியுமா என்றால் எதிரி அவர் வீட்டில் வைத்தே கார் தொழில் செய்து வந்தார். எனக்கு ஒரு வருட வருமானம் எவ்வளவு என்றால் 22 லட்சம் வரை வரும். அதற்கு வருமான வரி தாக்கல் செய்துள்ளேனா என்றால் பைனான்சில் வருமான வரி செலுத்தி வருகிறேன். பைனான்சில் இருந்து உத்தேசமாக வருட வருமானம் என்ன வரும் என்றால் வருடத்திற்கு 8 லட்ச ரூபாய் வரும். என்னுடைய வருமான வரி கணக்கை தாக்கல் செய்ய இயலுமா என்றால் இயலும்.

எதிரி எதற்காக கடன் கேட்டார் என்றால் கார் வாங்குவதற்காக அவசரமாக பணம் தேவை என்று கேட்டார் மற்றும் அவர் பையனின் வீடு கட்டவும் பணம் கேட்டார். நான் எனது நிரூபண வாக்குமூலத்தில் எதிரி பண நெருக்கடியில் இருப்பதாக கூறியுள்ளேன் என்றால் எதிரி அவ்வாறு கூறி என்னிடம் பணம் கேட்டார். எனக்கு வருட வருமானம் 8 லட்ச ரூபாய் என்று சொல்லியுள்ள நிலையில் கைவசம் எவ்வளவு பணம் இருக்கும் என்றால் 4 லட்சம் இருக்கும். எதிரிக்கு கொடுத்ததாக சொல்லப்படும் ரூபாய் 50 லட்சத்தை நான் என்னுடைய வருமான வரியில் காட்டவில்லை நண்பர்களிடம் இருந்து கடன் வாங்கி கொடுத்தேன். எனது நண்பர் ஆனந்த் என்பவரிடம் இருந்து ரூபாய் 10 லட்சம் வாங்கினேன் செல்லம் என்பவரிடம் இருந்து ரூபாய் 20 லட்சமும் நடேசன் என்பவரிடம் இருந்து 10 லட்சமும் என்னிடம் உள்ள ரூபாய் 10 லட்சமும் சேர்த்து கடன் கொடுத்தேன். என் நண்பர்கள் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க வருவார்களா என்றால் கேட்டு பார்த்து சொல்கிறேன். ஆனந்த் என்பவருக்கு

பால்கிணத்தாவிளை, நடேசன் செந்துாரான் நகரில் உள்ளார். ஆனந்திக்கு வயது 40 இருக்கும்.

எதிரிக்கு எங்கு வைத்து கொடுத்தேன் என்றால் எதிரியின் வீட்டில் வைத்து கொடுத்தேன். என்னுடன் ஆனந்த் என்பவரை அழைத்துச் சென்றேன். எதிரியின் வீட்டிற்கு எப்போது சென்றேன் என்றால் 2021ம் ஆண்டு டிசம்பர் மாதம் சென்றேன் நான் சென்ற போது எதிரியின் வீடு புது வீடாக இருந்ததா அல்லது பழைய வீடாக இருந்ததா என்றால் பழைய வீடாக இருந்தது. எதிரிக்கு எத்தனை குழந்தைகள் என்றால் 4 மகன்கள், மூத்த பையன் பெயர் தெரியாது, விஜய பாபு மற்றும் ஆனந்த் பாபு இருவர் மட்டும் வீட்டில் இருந்தனர். செல்லம் என்பவரை தெரியுமா என்றால் தெரியும் அவர் என்ன வேலை பார்க்கிறார் என்றால் மிட்டாய் கடை தொழில் செய்து வருகிறார். அவருக்கும் வட்டிக்கு வாங்கி கொடுக்கும் தொழில் உண்டா என்றால் இல்லை. செல்லமும் எதிரியும் ஒரே ஊர்காரர்கள் என்றால் சரிதான். இருவருக்கும் நல்ல பழக்கவழக்கம் உண்டு என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

எதிரிக்கு கொடுத்த பணம் எத்தனை ரூபாய் கட்டுகளாக கொடுத்தேன் என்றால் 500 ரூபாய் கட்டுகளாக 100 கட்டுகள் கொடுத்தேன். நான் பணம் கொடுத்ததாக கூறும் தேதியன்று எதிரி ஊரில் இல்லை என்றாலும் அப்போது சென்னையில் இருந்தார் என்றாலும் சரியல்ல.

(நீதிமன்ற கேள்வி 500 ரூபாய் கட்டுகளாக 100 கட்டுகள் வங்கியில் இருந்து எடுத்து வைத்திருந்தேனா அல்லது வீட்டில் வைத்திருந்தேனா என்றால் வீட்டில் தான் வைத்திருந்தேன்).

வழக்கறிவிப்பு என்ன காரணத்திற்காக திருப்பப்பட்டது என்றால் வீட்டில் இல்லை என்று திருப்பப்பட்டது. எதிரியிடம் காசோலையை எப்போது வசூலுக்கு செலுத்த வேண்டும் என்று கேட்டேன் என்றால் 16.02.2022 அன்று கேட்டேன். காசோலை திருப்பப்பட்ட பின்னர் எதிரியை சென்று பார்த்தேனா என்றால் எதிரி 18.02.2022 அன்று மாலை என்னை வந்து பார்த்தார். வழக்கறிவிப்பு அனுப்பிய

பின்னர் எதிரியை சென்று பார்த்தேனா என்றால் இல்லை. செல்லம் தான் எதிரியிடம் இருந்து காசோலை எடுத்து வந்து என்னிடம் கொடுத்தார் என்றால் செல்லம் யார் என்றே எனக்கு தெரியாது. செல்லத்திற்கு எத்தனை குழந்தைகள் என்றால் 2 பையன்கள். காசோலையில் எதிரியின் கையெழுத்து மற்றும் காசோலை விவரங்கள் அனைத்தும் நானே நிரப்பி வசூலுக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. எனக்கும் எதிரிக்கும் பண கொடுக்கல் வாங்கல் எதுவும் கிடையாது என்றாலும் நான் எதிரியை துன்புறுத்துவதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

நான் பணம் கொடுத்ததாக சொல்லும் சமயம் எதிரி ஊரில் இல்லை அவர் 2019 ம் ஆண்டே சென்னை சென்றுவிட்டார் என்றால் சரியல்ல அவர் ஊரில் தான் இருந்தார். நான் எதிரிக்கு பணம் கொடுத்ததாக சொல்லும் சமயம் எதிரியின் பழைய வீடு இடிக்கப்பட்டு இருந்தது என்றாலும் பின்னர் தான் புது வீடு கட்டினார் என்றாலும் சரியல்ல சாட்சி அதற்கு பக்கத்திலேயே அவரது மகன் வீடு கட்டியிருந்தார் அந்த வீடு பால்காய்ப்பு நடைபெற்றது. எதிரியின் மகன் வீடு உத்தேசமாக அரை கி.மீ தூரம் இருக்குமா என்றால் 20 மீ தூரம் இருக்கும். தாவா காசோலையில் எதிரி கையெழுத்து ஏற்கனவே போட்டு வைத்திருந்தாரா என்றால் என் முன்னிலையில் தான் நிரப்பினார். செல்லத்திற்கு எவ்வளவு வருமானம் இருக்கும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

நீதிமன்றத்தில் பகிரங்கமாக சாட்சி சொன்னதை என்னால் சொல்லப்பட்டு தட்டெழுத்தரால் தட்டெழுத்தில் பொறிக்கப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.

**குற்றவியல் நடுவர்,**
**விரைவு நீதிமன்றம்,**
**நாகர்கோவில் (முழு பொறுப்பு).**